விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 069 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 14 வியாழக்கிழமை (26.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மாதம்

## புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர்

# சுரேஷ் சலே பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது



### ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தில் திடீர் திருப்பம்

(கொழும்பு)

முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி, ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## அடாவடியாக இராணுவம் நெல் விற்பனை

### ரவிகரன் எம்.பி கண்டனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, நீராவிப் பிட்டி நெற்களஞ்சியசாலை 15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் வெடி மருந்துடன் இளைஞன் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் வெடி மருந்தை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 26 வயதுடைய இளைஞ ன் 15ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் ஆயுதங்களைத் தேடி பரந்தனில் அகழ்வுப் பணி



15ஆம் பக்கம் பார்க்க

## 72 மணி நேரத் தடுப்புக் காவலில் சுரேஷ் சலே தடுக்கப்பட்டு விசாரணை

### பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு



(கொழும்பு)

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே 72 மணி நேர தடுப்புக் காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில், மேல் மாகாணத்திற்குப் 16ஆம் பக்கம் பார்க்க

## வனவளத் திணைக்களம்

# பொதுமக்கள் காணியை முழுமையாக விடுவிக்க வேண்டும்



### கிளிநொச்சி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆளுநர்

(கிளிநொச்சி)

மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதார நிலங்களுக்கான ஆவணங்கள் இல்லையென்பதைக் காரணங் காட்டி, 15ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகம் நகரப் பகுதியில் தங்கச் சங்கிலி அறுப்பு

### மயிலிட்டி இராணுவ முகாமில் பணியாற்றுபவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் நகரப் பகுதியில் சங்கிலித் திருட்டில் ஈடுபட்ட இராணுவ முகாமில் பணியாற்றும் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை சுன்னாகம் நகரப் பகுதியில் வீதியில் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் கத்தி முனையில் முச்சக்கரவண்டி பறிப்பு

### சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் மீற்றர் வட்டிப் பிரச்சினையால் முச்சக்கரவண்டி ஒன்று கத்தி முனையில் பறிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், 16ஆம் பக்கம் பார்க்க

## குஸ் போதையுடன் கிளிநொச்சியில் மாணவர்கள் இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அறிவியல்நகரப் பகுதியில் இரு சிங்கள மாணவர்கள் குஸ் வகை போதைப் பொருளுடன்கைது செய்யப்பட்டுள்ளனர். 15ஆம் பக்கம் பார்க்க

## விசுவமடுவில் விபத்து; குடும்பப் பெண் மரணம்

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடுவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான சுகந்தினி (வயது-53) என்பவரே உயிரிழந்தவராவார்.

வீதியைக் கடக்க முற்பட்ட பெண்ணை வேகக்கட் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AI என்பது உலகளாவிய பொது நலனாக வளர வேண்டும்

## AI உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி உரை

(புதுடில்லி)

**மனித வரலாறு நெருப்பு, எழுத்து, மின்சாரம், இணையம் என நாகரிகத்தின் வரலாற்றை மாற்றியமைத்த பல தொழில்நுட்பப் புரட்சிகளைக் கண்டுள்ளது. அவற்றுக்கு நிகரான ஒரு முக்கியத்துவத்தை செயற்கை நுண்ணறிவு (AI) பெற்றுள்ளது. ஏனையவை பல தசாப்தங்களாக நிகழ்ந்த மாற்றங்கள். ஆனால் செயற்கை நுண்ணறிவு (AI) சில வாரங்களுக்குள்ளேயே உலகை தன்வசப்படுத்தியுள்ளது எனப் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**



இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் பல்வேறு நாட்டுத் தலைவர்கள், கண்டுபிடிப்பாளர்கள், தொழில்நுட்பவியலாளர்களின் சங்கமத்துடன் AI உச்சிமாநாடு பிரமாண்டமாக இடம்பெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே பாரதப் பிரதமர் மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர்,

மனித வரலாற்றின் ஒரு முக்கிய தருணத்தில், உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற "AI தாக்க உச்சிமாநாடு 2026"ல் (AI Impact Summit 2026) ஒன்றிணைந்தன. பல்வேறு நாடுகளின் அரசுத் தலைவர்கள், அரசாங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை வரவேற்பது இந்தியாவுக்குப் பெருமிதமும் மட்டற்ற மகிழ்ச்சியும் அளிக்கும் ஒரு தருணமாக அமைந்தது.

இந்தியா தான் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலிலும் பிரம்மாண்டத்தையும் உத்வேகத்தையும் வெளிப்படுத்துகின்றது. இந்த உச்சிமாநாடும் அதற்கு விதிவிலக்கல்ல. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இங்கு ஒன்றுகூடினர். தொழில்நுட்பக் கண்டுபிடிப்பாளர்கள் அதிநவீன செயற்கை நுண்ணறிவு (AI) தயாரிப்புகளையும் சேவைகளையும் காட்சிப்படுத்தினர். கண்காட்சி அரங்குகளில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆர்வத்துடன் கேள்விகளை எழுப்புவதையும் புதிய சாத்தியக்கூறுகளைக் கற்பனை செய்வதையும் காண முடிந்தது. அவர்களின் ஆர்வம் இதனை உலகின் மிகப் பெரிய மற்றும் மிகவும் ஜனநாயகமயமான AI உச்சிமாநாடாக மாற்றியது. இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் இது ஒரு முக்கியமான தருணமாக நான் கருதுகிறேன். ஏனெனில் AI கண்டுபிடிப்பு மற்றும் பயன்பாட்டிற்கான ஒரு மக்கள் இயக்கம் இப்போது உண்மையிலேயே தொடங்கியுள்ளது.

AI இயந்திரங்களுக்கு அறிவாற்றலை வழங்குகிறது. ஆனால் அதைவிட முக்கியமாக, அது மனித எண்ணங்களை பன்மடங்கு வலுப்படுத்தும் ஒரு கருவியாகும் (force multiplier). எனவே, AI-யை இயந்திரங்களை மையமாகக் கொண்டதாக அல்லாமல் மனிதர்களை மையமாகக் கொண்டதாக மாற்றுவது மிகவும் அவசியம். இந்த உச்சிமாநாட்டில், 'சர்வஜன ஹிதாய, சர்வஜன சுக்காய' (அனைவருக்கும் நலம், அனைவருக்கும் மகிழ்ச்சி) என்ற கோட்பாட்டின் அடிப்படையில், மனித நலனை உலகளாவிய AI விவாதங்களின் மையப்பொருளாக மாற்றியுள்ளோம்.

தொழில்நுட்பம் எப்போதும் மனிதர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமே அன்றி, மனிதர்கள் தொழில்நுட்பத்திற்காக அல்ல என்பது என் நிலையான நம்பிக்கை. UPI வழியிலான டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையாக இருந்தாலும் சரி, COVID தடுப்பூசி செலுத்துவதாக இருந்தாலும் சரி, எமது டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பானது (Digital Public Infra structure) அனைவரையும் சென்றடைவதை நாம் உறுதி செய்துள்ளோம். இந்த உச்சி மாநாட்டிலும் அதே உத்வேகத்தை என்னால் காண முடிந்தது. குறிப்பாக வேளாண்மை, பாதுகாப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கான (Divyan gjan) உதவி மற்றும் பன்மொழி பேசும் சமூகங்களுக்கான தொழில்நுட்பக் கருவிகள் போன்ற துறைகளில் நமது கண்டுபிடிப்பாளர்களின் பணிகள் அதனைப் பிரதிபலித்தன.

இந்தியாவில் AI-யின் சக்தி வாய்ந்த வலுப்படுத்தும் திறனை ஏற்கெனவே பல எடுத்துக்காட்டுகள் நிரூபித்துள்ளன. சமீபத்தில் இந்திய பால்வளக் கூட்டுறவு நிறுவனமான அமுல் (AMUL), "சரளாபென்" (Sarlaben) எனும் AI-ஆல் இயங்கும் டிஜிட்டல் உதவியாளரை அறிமுகப்படுத்தியது. இது பெரும்பாலும் 3.6 மில்லியன் பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை ஆரோக்கியம் மற்றும் உற்பத்தித்திறன் குறித்த வழிகாட்டுதல்களை அவர்களின் சொந்த மொழியிலேயே உடனுக்குடன் வழங்கி வருகிறது. அதேபோல் 'பாரத் விஸ்தார்' (Bharat VISTAAR) எனப்படும் AI தளம், வானிலை முதல் சந்தை நிலைவரம் வரை பல்வேறு தகவல்களை பன்மொழிகளில் வழங்கி விவசாயிகளை வலுப்படுத்துகிறது.

மனிதர்கள் ஒருபோதும் இயந்திரங்களுக்கான வெறும் தரவுப் புள்ளிகளாகவோ (Data points) அல்லது மூலப்பொருட்களாகவோ மாறிவிடக் கூடாது. மாறாக உலகளாவிய தெற்கு (Global South) நாடுகளின் முன்னேற்றத்திற்கான வாயில்களைத் திறக்கும் ஒரு பொது நலக் கருவியாகவே AI அமைய வேண்டும். இந்தத் தொலைநோக்குப் பார்வையைச் செயற்பாட்டிற்குக் கொண்டு வரும் வகையில் மனித மையப்படுத்தப்பட்ட AI நிர்வாகத்திற்கான "மானவ்" (MANAV) கட்டமைப்பை இந்தியா முன்மொழிந்துள்ளது.

M – Moral and Ethical Systems (அறநெறி மற்றும் ஒழுக்கக் கோட்பாடுகள்): AI, தெளிவான அறநெறி வழிகாட்டுதல்களின் அடிப்படையில் அமைய வேண்டும்.

A – Accountable Governance (பொறுப்புமிக்க நிர்வாகம்): வெளிப்படையான விதிமுறைகள் மற்றும் வலுவான கண்காணிப்பு நடைமுறைகளை உறுதி செய்தல்.

N – National Sovereignty (தேசிய இறையாண்மை): தரவுகளின் மீதான ஒரு நாட்டின் இறையாண்மை மற்றும் உரிமைகளுக்கு மதிப்பளித்தல்.

A – Accessible and Inclusive (அணுகத்தக்கதும் அனைவரையும் உள்ளடக்கியதும்): AI ஒரு சிலரின் முற்றுரிமையாக (Monopoly) இருக்கக் கூடாது. அது அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

V – Valid and Legitimate (சட்டபூர்வமான மற்றும் அங்கீகரிக்கப்பட்டவை): AI தொழில்நுட்பமானது சட்டங்களுக்கு உட்பட்டதாகவும் சரிபார்க்கத்தக்கதாக (verifiable) இருக்க வேண்டும்.

"மனிதன்" என்று பொருள்படும் "மானவ்" (MANAV) கட்டமைப்பு 21-ஆம் நூற்றாண்டில் AI-யை மனித விழுமியங்களோடு பிணைப்பதற்கான அடிப்படை அறநெறிகளை வழங்குகிறது.

நமது குழந்தைகளின் நலன் என்பது நமது இதயத்திற்கு நெருக்கமான ஒரு விஷயமாகும். உலகம்முழுவதும்கல்வி முறையில் நாம் எந்த அளவு அக்கறை காட்டுகிறோமோ அதேபோன்று குடும்பத்தின் வழிகாட்டுதலுடனும் பொறுப்புணர்வுடனும் கூடிய ஈடுபாட்டை ஊக்குவிக்கும் பாதுகாப்பு அம்சங்களுடன் AI அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்றார். (ம-7)


## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

**உபயகாரர் பொதுச் சபைக்கூட்டம் – 2026**

பொதுச்சபைக் கூட்டமானது எதிர்வரும் 01.03.2026 அன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. எனவே தவிர்க்க முடியாத காரணத்தால் 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று என மாற்றப்பட்டுள்ளது. எனவே அனைத்து உபயகாரர்களும் அன்றையதினம் காலை 10 மணிக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(6920)

செயலாளர்
தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாக சபை.
அளவெட்டி வடக்கு

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி **கி.ஜெயமனோன்**
அவர்களின் அன்பு மாமியார்
**அமரர்**
**அன்ரன் இராசநாயகம்**
**பிரான்சிஸ்கா நட்சேத்திரம்**
அவர்கள் இறைபதமடைந்த
செய்தி கேட்டுத் துயரடைவதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு 28.11.1947 இறப்பு 25.02.2026

(2091)

ஆசிரியர் ஊழியர் நலன்புரிக்கழகம்,
யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு திருவிழா நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை (27) வெள்ளிக்கிழமை கோலாகலமாக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து இரு தினங்கள் குறித்த திருவிழா இடம்பெறும்.

கச்சதீவுத் திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.


இம் முறை கச்சதீவுத் திருவிழாவில் இலங்கையிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் சுமார் 8 ஆயிரம் பேர் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நீதி

### அரசாங்கம் உறுதிமொழி

**(கொழும்பு) ------ உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நீதியை பெற்றுக் கொடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது.**



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இந்த தாக்குதலை தடுக்க தவறியவர்கள், இந்த தாக்குதலை வழிநடத்தியவர்கள் மற்றும் இந்த தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற ரீதியில் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளுக்கமைய, சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவதாகவும், வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன், சில நபர்கள் வெளிநாடுகளில் இருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

அதற்கமைய, குற்றப் புலனாய்வு திணைக்களம் உரிய விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், எதிர்வரும் ஏப்ரல் 21இற்கு முன்னதாக நீதியை வழங்க முடியா விட்டாலும், விரைவில் இதற்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதாக அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி)

# அரச ஊழியர்களின் வருடாந்த இடமாற்றங்கள் ஏப்ரல் முதல் அமுல் - அரசசேவை ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்காக அறிவிக்கப்பட்டிருந்த 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்கள் அனைத்தும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என அரச சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனைத்து அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விசேட சுற்றறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 2026.01.01 முதல் 2026.03.31 வரையான காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படவிருந்த இடமாற்றங்களே இவ்வாறு ஏப்ரல் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பகிரங்க சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி)

# பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ்மா அதிபர் உடனடியாக பதவி விலக வேண்டும்

## உதய கம்மன்பில வலியுறுத்து

(கொழும்பு)

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியா விட்டால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும் என மக்கள் குரல் அமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.



மக்கள் குரல் அமைப்பின் சார்பாக ஊடக அறிக்கையை வெளியிட்டு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

படுகொலை கலாசாரம் 2025 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக படுகொலை கலாசாரம் பலமடைந்து தற்போது தீவிரமடைந்துள்ளது.

நீதியை நிலைநாட்டும் நீதிமன்றம், அதிகாரிகள், சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்டமை ஒட்டுமொத்த சமூக கட்டமைப்பையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

எந்நேரத்தில் எங்கு படுகொலைகள் இடம்பெறும் என்ற அச்சத்தில்தான் மக்கள் இன்று வாழ்கிறார்கள்.

தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் இந்த பொறுப்பை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்துள்ளது. பொது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் சகல கட்டமைப்பும் பலவீனமடைந்துள்ளது.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் பலவீனமடைந்துள்ளது. இதன் பொறுப்பை ஏற்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உடன் பதவி விலக வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். அதேபோல் பொலிஸ் துறையும் இன்று அரசியலாக்கப்பட்டுள்ளது. ஆகவே பொலிஸ்மா அதிபரும் உடன் பதவி விலக வேண்டும்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. பாதுகாப்பை பலப்படுத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம். தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை அரசியல்மயப்படுத்த கூடாது என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (நி)

# ஏற்றுமதி வருமானம் ஜனவரியில் அதிகரிப்பு

(கொழும்பு)


2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1,552 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இது கடந்த 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 13.7 சதவீத வளர்ச்சியாகும் என சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி மாதத்தின் மொத்த ஏற்றுமதி வருமானமான 1,552 மில்லியன் டொலர்களில், வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி மூலம் 1,165 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் கிடைத்துள்ளது.

இது கடந்த ஆண்டை விட 10.5 சதவீத வளர்ச்சியாகும். அதேவேளை, சேவைத் துறை மூலமான ஏற்றுமதி வருமானம் 367 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதுடன், இது 24.5 சதவீத பாரிய வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2026 ஜனவரியில் நாட்டின் ஏற்றுமதித்துறையின் ஒட்டுமொத்த செயல்திறன் 13.7 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுச் செய்திகள்



# உலகக் கிண்ண ரி-20 தொடர்
# பாகிஸ்தானை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது இங்கிலாந்து

**ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சூப்பர் 8 சுற்றில், குழு 2 இல் இருந்து இங்கிலாந்து அணி முதலாவது அணியாக அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.**

நேற்று முன்தினம் நடைபெற்ற விறுவிறுப்பான சூப்பர் 8 சுற்றுப் போட்டியில் பாகிஸ்தானை 2 விக்கெட்டுகளால் வீழ்த்தி, இங்கிலாந்து அணி ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

பல்லேகலை சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

தொடர்ந்தும் 165 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.1 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 166 ஓட்டங்களை பெற்றது.

அதன்படி குறித்த போட்டியில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 4 புள்ளிகளுடன் முதலாவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

புள்ளிப்பட்டியலில் (குழு 2) நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகள் தலா ஒரு புள்ளியுடன் முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களில் உள்ளன.

மேலும், இலங்கை அணி தான் விளையாடிய ஒரு போட்டியில் தோல்வியடைந்து, புள்ளி எதுவும் பெறாத நிலையில் நான்காம் இடத்தில் உள்ளது.

இந்தக் குழுவில் இருந்து அரையிறுதிக்குச் செல்லும் இரண்டாவது அணி எது என்பதைத் தீர்மானிப்பதில் ஏனைய அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவுகின்றது. (3)

## ஐ.பி.எல் தொடரில் புதுப்பொலிவுடன் களமிறங்கும் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி




இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் அடுத்த பருவத்துக்காக அனைத்து அணிகளும் தயாராகி வரும் நிலையில், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி தனது புதிய இலட்சினையை அறிமுகப்படுத்தி ரசிகர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

வெறும் வடிவமைப்பு மாற்றமாக மட்டுமல்லாமல், உத்தரப்பிரதேச மாநிலத்தின் உணர்வுகளையும் கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் இந்த புதிய இலட்சினை உருவாக்கப்பட்டுள்ளது.

லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, இந்த புதிய இலட்சினையில் கருடன், மகுடம் மற்றும் யானை ஆகிய மூன்று முக்கிய சின்னங்கள் இடம்பெற்றுள்ளன.

இது குறித்து கருத்து தெரிவித்த லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் உரிமையாளர் சாஷ்வத் கோயங்கா, இந்த புதிய இலட்சினை எங்களுடன் உணர்வுப்பூர்வமாக இணைந்தது. லக்னோ மற்றும் உத்தரப்பிரதேச மக்கள் எங்களை முதல் நாளிலிருந்தே ஏற்றுக் கொண்டனர். அவர்களின் அன்பு மற்றும் நம்பிக்கைக்கு ஒரு மரியாதையாகவே இந்த இலட்சினை உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த பருவத்தில் ரிஷப் பண்ட் தலைமையின் கீழ் விளையாடிய லக்னோ அணி, 12 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தைப் பிடித்தது.

தற்போது 2026 ஐ.பி.எல் தொடருக்காக ஒரு பலமான அணியை லக்னோ உ[illegible] (3)

## உலகக் கிண்ண ரி-20 இறுதிப் போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டு விற்பனை ஆரம்பம்




2026 ரி-20 உலகக் கிண்ணத் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டு விபரங்களை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 4 மற்றும் 5ஆம் திகதிகளில் அரையிறுதிப் போட்டிகளும், மார்ச் 8ஆம் திகதி இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளன.

இதற்கான நுழைவுச்சீட்டுகளை தற்போது ரசிகர்கள் tickets.t20worldcup.com என்ற இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். முதலாவது அரையிறுதிப் போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானம் அல்லது கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானம் ஆகியவற்றின் ஒன்றில் நடைபெறும்.

இது சூப்பர் 8 சுற்று முடிவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இரண்டாவது அரையிறுதிப் போட்டி [illegible] மைதானத்தில் நடைபெறும்.

பாகிஸ்தான் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றால், மார்ச் 4ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் விளையாடும்.

பாகிஸ்தான் தகுதி பெறாமல், இலங்கை அணி இந்தியா தவிர்ந்த வேறு ஏதேனும் அணியுடன் அரையிறுதியில் மோதினால், அந்தப் போட்டியும் கொழும்பில் நடைபெறும்.

அத்தோடு, பாகிஸ்தான் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றால், குறித்த போட்டி கொழும்பில் நடைபெறும். இல்லையெனில், இறுதிப் போட்டி அஹமதாபாத்தில் நடைபெறும் என குறிப்பிடப்படுகின்றது.

ஒருவேளை ரசிகர்கள் வாங்கிய நுழைவுச்சீட்டின்படி போட்டி, குறித்த மைதானத்தில் நடைபெறாவிட்டால், அதற்கான பணம் மீள வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் விஜித ஹேரத் ஜேர்மன் விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் இன்று வியாழக்கிழமை ஜேர்மனிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜேர்மன் - ஆசிய பசுபிக் வணிக சங்கம் பிரெமன் அத்தியாயத்தால் வழங்கப்பட்ட அழைப்பின் பேரில் ஜேர்மனுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் அமைச்சர் விஜித ஹேரத், வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான தொடர் கூட்டங்களில் பங்கேற்பார் என வெளிவிவகார அமைச்சு அறிக்கையில் தெரிவித்துள்ளது.



இந்த விஜயத்தின் போது அமைச்சர் வடேபுலுடன் கலந்துரையாடவும், இலங்கை குறித்த வணிக வட்டமேசை மாநாட்டில் பங்கேற்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (நி)

# அவசரமாக ரணிலை சந்தித்த எதிர்க்கட்சிக் குழுக்கள்

(கொழும்பு)

எதிர்க்கட்சிக் குழுக்கள் நேற்றுக் காலை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டன.

கொழும்பு ஃப்ளவர் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

எதிர்க்கட்சிகளுக்கு இடையே ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காக இச்சந்திப்பு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தரம் குறைந்த நிலக்கரி விவகாரம், பாதாள உலகக் கொலைகள் மற்றும் எரிவாயு பிரச்சினை தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதில் உதய கம்மன்பில, அனுர பிரியதர்ஷன யாப்பா, ஜீ.எல். பீரிஸ், மஹிந்த அமரவீர, சாகல ரத்நாயக்க, தலதா அத்துகோரள, பிரேம்நாத் சி. தொலவத்த, சுகீஸ்வர பண்டார உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (நி)

# KTM மோட்டார் சைக்கிள்களுடன் வீதிகளை மீண்டும் உயிர்ப்பூட்டிய DPMC

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் நிறுவனம் (DPMC) ஐந்து வருட கால இடைவெளியின் பின்னர் KTM மோட்டார் சைக்கிள்களை பெருமையுடன் இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது உயர்தர செயல்திறன் கொண்ட மோட்டார் சைக்கிள் துறைக்கு திருப்பு முனையாக அமைந்திருப்பதுடன், உலகத் தரம் வாய்ந்த போக்குவரத்துத் தீர்வுகளை வழங்குவதில் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நவீன ரக KTM மோட்டார் சைக்கிள்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு பத்தரமுல்லையில் உள்ள DPMC நிறுவனத்தின் காட்சிக் கூடத்தில் இடம்பெற்றது. மிகவும் எதிர்பார்ப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வானது பிரதான மோட்டார் சைக்கிள் துறையின் புதுப்பிக்கத்தக்க ஆர்வத்தை வெளிப்படுத்தியதுடன், உலகில் அதிகமாகக் கொண்டாடப்படும் உயர்ந்த செயற்றிறனைக் கொண்ட மோட்டார் சைக்கிள் வர்த்தக நாமம் இலங்கையின் வீதிகளுக்கு மீண்டும் திரும்புகின்றன என்ற அறிவிப்பை விடுப்பதாகவும் அமைந்தது.

இறக்குமதிக் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் DPMC நிறுவனம் 3,000 இற்கும் அதிகமான பல்வேறு வகையான KTM மோட்டார் சைக்கிள்களை வெற்றிகரமாக விற்பனை செய்திருந்தது. உள்ளூர் சந்தையில் அதிக கேள்வியைக் கொண்ட மோட்டார் சைக்கிளாக இது விளங்கியது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக புதிய இறக்குமதிகள் இல் லாத போதும், ஏற்கனவே நாட்டில் இருந்த KTM மோட்டார் சைக்கிள்கள் தமது சிறந்த செயலாற்றலை வெளிப்படுத்தத் தவறவில்லை. DPMC நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒப்பிட முடியாத விற்பனைக்குப் பின்னரான சேவை, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட வாடிக்கையாளர் ஒத்துழைப்பு என்பன இதற்கு மேலும் வலுச்சேர்த்தன. இந்த உறுதிப்பாடு, தற்போதைய KTM உரிமையாளர்களுக்குத் தொடர்ந்து உச்ச செயல்திறன், நம்பகத்தன்மை மற்றும் திருப்தியான அனுபவம் என்பவற்றை வழங்குகின்றது.



KTM மோட்டார் சைக்கிள்கள் ஐரோப்பாவின் முதல்தர பந்தய மோட்டார் உலகளாவிய ரீதியில் சைக்கிள் வர்த்தக நாமமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், அதன் உயர்ந்த வினைத்திறன் மிக்க செயற்பாடு மோட்டார் சைக்கிள் துறையில் அதனைத் தொடர்ந்தும் உறுதியான இடத்தில் பேணி வருகின்றது.

இதன் காரணமாக MotoGP, Dakar Rally, மோட்டார் பந்தயங்கள் மற்றும் சர்வதேச மோட்டார் பந்தயத் திடல்கள் போன்ற முன்னணி பந்தயங்களில் KTM மோட்டார் சைக்கிள்கள் தனக்கான தனியிடத்தை உறுதி செய்து வருகின்றன. அது மாத்திரமன்றி இந்தியா, நேபாளம் போன்ற பிராந்திய சந்தைகள் மற்றும் உலகின் 80 இற்கும் அதிகமான சந்தைகளிலும் இது உறுதியான பிரசன்னத்தைக் கொண்டுள்ளது. KTM இன் பந்தய பாரம்பரியம் மற்றும் பொறியியல் சிறப்பு என்பன உலகளாவிய ரீதியில் உள்ள வாகன ஓட்டிகள் மற்றும் பந்தய நிபுணர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. KTM மோட்டார் சைக்கிள்களுக்கான இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர் என்ற ரீதியில் DPMC நிறுவனம், நாடு முழுவதிலுமுள்ள விஸ்தரிக்கப்பட்ட காட்சியறைகள் மற்றும் சேவை வலையமைப்புக்களைத் திட்டமிட்டிருப்பதுடன், அதில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விரிவாக்கமும் அடங்கியுள்ளது. இதனால் நாடளாவிய வாடிக்கையாளர்களுக்கு எளிதான அணுகல் உறுதி செய்யப்படுகிறது. நிறுவனம் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப குழுக்கள், அசல் உதிரிப்பாகங்கள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவையுடன் பிரசித்திபெற்ற சேவை ஆதரவை முழுமையாக வழங்க தயாராக உள்ளது. இதன் காரணமாக மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் மீண்டும் ஒப்பிட முடியாத அனுபவத்தை அனுபவிக்கலாம். உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமங்கள் மற்றும் முற்றும் முன்னணி போக்குவரத்துத் தீர்வுகளை இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு கொண்டு வருவதில் DPMC தொடர்ந்து செயற்படுகின்றது என்பது இதன் மூலம் மீண்டும் உறுதியாகின்றது.

மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள 011 470 0600 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும் அல்லது www.dpmco.com என்ற இணையத் தளத் திற்கு விஜயம் செய்யவும் அல்லது KTM Sri Lanka என்ற முகப் புத்தகப் பக்கத்தில் தொடரவும்.

# வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்ற Valibel Finance

நாடளாவிய ரீதியில் சிறந்த நிதிச் சேவைகள் வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற Valibel Finance PLC நிறுவனமானது தனது சேவைகளை விஸ்தரிக்கும் பொருட்டு கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, வாழைச்சேனை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் தனது கிளைகளை நிர்மாணித்துள்ளது.

இக்கிளைகளின் அங்குரார்ப்பண நிகழ்வுகளில், நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஜயந்த ரங்கமுவ, அவர்களுடன் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள், கிளை நிறுவன ஊழியர்கள், மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், முகாமைத்துவ பணிப்பாளர் ஜயந்த ரங்கமுவ கூறுகையில், "கிழக்கு மாகாணத்திற்குள் கிளை வலையமைப்பை விரிவுபடுத்துவதில் நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம். இப்பிரதேசத்தின் பாரம்பரிய மரபுகள் மற்றும் கலாசார பன்முகத்தன்மையை நாம் மிகவும் மதிக்கிறோம். பிரதேச வளர்ச்சிக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிக்கும் நீண்டகால கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கு நாம் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை மிக உயர்ந்த மட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம், வாடிக்கையாளர் மீதான இப்பொறுப்பு, எமது வாடிக்கையாளர்கள் எம் மீது வைத்திருக்கும் வலுவான மற்றும் நீடித்த நம்பிக்கையை வளர்த்துள்ளது."

Valibel Finance PLCஇன் வெற்றிகரமான வளர்ச்சி பயணத்தில், நாடளாவிய ரீதியில் ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடன், அதன் அனைத்து வகையான குத்தகைச்சேவைகள், நிலையான வைப்புகள், தங்கக் கடன்கள், அடகுக் கடன்கள் மற்றும் தானியங்க வரைவு சேவைகள் மற்றும் நுண் நிதிச் சேவைகளை நவீன டிஜிற்றல் தொழிநுட்ப கட்டமைப்பின் கீழ் வழங்குகிறது.

Valibel Finance PLC இலங்கையின் நிதித்துறையில் ஸ்திரத்தன்மையுள்ள நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் LRA (A-) கடன் தர மதிப்பீட்டைக் கொண்டுள்ளது.

நிலையான வளர்ச்சி, நிலைத்தன்மை, இலாபம் மற்றும் செயற்பாட்டுத் திறனை வெளிப்படுத்தும் வலிபெல் ஃபைனான்ஸ், "தி குளோபல் எகனாமிக்ஸ்" வழங்கும் மதிப்புமிக்க "சிறந்த நிதி நிறுவனம்" விருதையும் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பெற்றுள்ளது. Valibel Finance PLC இன் நம்பகத்தன்மை மற்றும் சேவையின் முன்னோடியாக திகழ்கின்றமை அதன் சேவை சிறப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது.




TRINCOMALEE




BATTICALOA




VALAICHENAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகத்தால் பரிந்துரைக்கப்பட்ட காணிகள்

# வனவளத் திணைக்களத்தால் முழுமையாக விடுவிக்கப்படவில்லை

## கிளி.மாவட்ட அரச அதிபர் சுட்டிக்காட்டு



**(கிளிநொச்சி) ............................**

**வனவளத் திணைக்களத்திடமிருந்து 10 ஆயிரத்து 821 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், வெறுமனே 1088 ஏக்கர் காணியை மாத்திரமே விடுவிக்க வனவளத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது என கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இது தொடர்பில் சுட்டிக் காட்டிய மாவட்டச் செயலாளர், கோரப்பட்ட முழுமையான 10 ஆயிரத்து 821 ஏக்கர் காணியையும் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்திய நிலையில், அக் கோரிக்கைக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஏகமனதாக அனுமதி வழங்கியது.

வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான முழுமையான விபரங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் இதன்போது குறிப்பிட்டார்.

மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதார நிலங்களுக்கான ஆவணங்கள் இல்லையென்பதைக் காரணங்காட்டி, அக்காணிகளை விடுவிக்க வனவளத் திணைக்களம் மறுப்புத் தெரிவிப்பதை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், மாவட்டச் செயலகத்தால் பரிந்துரைக்கப்படும் காணிகளை வனவளத் திணைக்களம் முழுமையாக விடுவிக்க வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது காலாண்டு மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம், குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சருமான இ.சந்திரசேகர் மற்றும் குழுவின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று புதன் கிழமை காலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திறன் அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்ற போது மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (நி-8)


## INVITATION FOR BID 2026/02
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via **PSDG Maintenance**
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-02-26 To 2026-03-13** during **09:00 hrs and 15:00 hrs**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam East Pradeshiya Sabha,** Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha,Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Table.


| | Document Issuing/Purchasing Period | | | From 2026-02- 25 To 2026-03-13 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2026-03-05 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2026-03-16 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| MA/NP/JAF/VEPS/ 2026/ '01 | Improvement of Head office Building – Vali East Pradeshiya Sabha | 4.24 | 56 | C8 or above (Building) | 3,500.00 | 43,000.00 | 28.05.2026 | 49 |


**Chairman**
**Divisional Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur.**
**26/02/2026**

(C-5058)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வையின்றி சாதித்த மேலும் இரு மாணவர்கள்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களான முருகமூர்த்தி கீர்த்திகன் சிறப்புக் கலைமாணிப் பட்டமும் சிவராசா தர்ஜன் பொதுக் கலைமாணிப் பட்டமும் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். (8)



யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதன் போது ஆரம்ப நிகழ்வாக இல்லங்களின் அணி நடையுடன் இப்பாடசாலையின் சென்.ஜோன் அம்புலன்ஸ் படையணி அங்கத்தினர்களினது அணி நடையும் மிக நேர்த்தியாக இடம் பெற்றது.

## மின்சாரசபை ஊழியர்கள்
# ஆறு மணி நேர
## அடையாள பணிப்புறக்கணிப்பு

**(கொழும்பு)**

**இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் இன்று அடையாள பணிப் புறக்கணிப்பு போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.**

இன்று நண்பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரை 6 மணிநேர அடையாள பணிபுறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த போராட்டம் காரணமாக மின்சார சபையின் நாளாந்த சேவைகள் மற்றும் பராமரிப்புப் பணிகளில் பாதிப்புகள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட
### பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

தணிஞாபகார்த்த கிண்ணத்திற்கான வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானம் மற்றும் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதல் சுற்றில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் உடுத்துறை மகா வித்தியாலய அணியை எதிர்த்து விக்னேஸ்வரா கல்லூரி அணியும், இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை அணியும், திரு இருதயக் கல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கட்டைக் காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து நாகர்கோவில் மகா வித்தியாலய அணியும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சிதம்பரக் கல்லூரி அணியும் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும் மோதவுள்ளன. (3-90)

## பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு; மன்னாரில் கையெழுத்து போராட்டம்



(மன்னார்)

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் புதிய சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்றையதினம் மன்னார் மாவட்டத்தில் கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பேருந்து நிலையத்திற்கு முன்பாக இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மீனவ சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-285)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 13, ஜின்னா வீதி, 82 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எஸ்.அப்துல்காதர் பெண் கே.எம்.நாச்சியா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் ஆதியில் 09.05.1921 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எஸ். சபாபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12072 ஆம் இலக்க உறுதிமூலம் வந்தடைந்ததாகவும் குறித்த உறுதி தொலைந்துவிட்டதாகவும் தொலைந்தமையை உறுதிப்படுத்தி மாவட்ட காணிப்பதிவகத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை சுல்தான் மொகைதீன் சுல்தான் அப்துல்காதர், சுல்தான் அப்துல் காதர் மொஹமட் சாகுல் ஹமீட், சுல்தான் அப்துல் காதர் மொஹமட் சுல்தான் மொகைதீன், சுல்தான் அப்துல் காதர் அப்துல் றகீம் 03.10.1966 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு செல்லையா மகேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 417 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் மீரா மொகைதீன் மகளூப் பெண் றகீலா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை முஹமட் மஹறூப் நஸ்லி, முஹமது மஹறூப் முகமது சுஹைல், முஹமது மஹறூப் முகமது றிஸ்வான், மஹறூப் நஸ்ரத் கான், முஹமது மஹறூப் முகமது நஸாயி 15.09.2025 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ம.அ.வினோறாஜ் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 741 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் மொஹிடீன் சரபுல் அனாம் மொஹமட் செஹான் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**


வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை, யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/87 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் "ஓட்டைப்புளியடி" நிலப்பரப்பு 3/4. வீடும் மற்றும் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள கிணற்றில் 4/5 பங்கும். இது முன்னுறுதிப்படியும் மிக நீண்ட கால ஆட்சிப்படியும் தற்போது நன்கு வரையறுக்கப்பட்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் 31.07.2025 ஆம் திகதி அளந்து விபரித்த 6388 ஆம் இலக்க நில அளவை படத்தின்படி துண்டு-1 எனக் காட்டப்பட்டுள்ள ஆதனத்தின் மொத்த விஸ்தீரணம் நிலப்பரப்பு பூச்சியம் குளி பதின்மூன்று தசம் மூன்று பூச்சியம் (நில.பரப்பு 0குளி 13.30) மற்றும் சேதமடைந்த வீடும். இதற்கெல்லைகள்.-

கிழக்கு :- நாதனின் ஆதனம்.
வடக்கு :- ஜின்னா வீதி
மேற்கு :- சிவபாதசுந்தரம் பெண் சற்சொருபியின் ஆதனம்.
தெற்கு :- நசுருதீன் முகமது சையீத்தின் ஆதனம்.

இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை மொஹிடீன் சரபுல் அனாம் மொஹமட் செஹான் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது மொஹிடீன் சரபுல் அனாம் மொஹமட் செஹான் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன். (C-5057)

**முதல்வர்,**
**யாழ். மாநகரசபை.**



யாழ்வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலய மகோற்சவம் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பதுளை மாவட்டம் அப்புத்தளை பிரதேச செயலக பிரிவில் உள்ள பண்டார எளிய பிரிவு, தம்பேத்தன்ன தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பெயிண்ட் வகைகள் ஆலய நிர்வாகத்திடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அநுராதபுரம் கெக்கிராவ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கட்டடப் பணிக்காக 1 இலட்சம் ரூபா நிதியும் ஆலய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-60)


கண்ணீர் அஞ்சலி



கிளி/பளை மத்திய கல்லூரியின் ஆசிரியர் திருமதி செ.கோமதி அவர்களின் அன்புத் தாயார்
தோற்றம்-31.09.1950
மறைவு-24.02.2026
அமரர். தம்பித்துரை புவனேஸ்வரி
அவர்கள் 24.02.2026 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (2087)
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கிளி/பளை மத்திய கல்லூரி(தேசிய பாடசாலை)

கண்ணீர் அஞ்சலி




கிளி/பளை மத்திய கல்லூரியின் ஆசிரியர் திரு. அ.ஜெயந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்.
வல்லிபுரம் அம்பலவாணர்
தோற்றம்: 08.09.1945 மறைவு: 13.02.2026
அவர்கள் 13.02.2026 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (2088)
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கிளி/பளை மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## திருமண பந்தத்தில் இணைந்தார் பிரபல 'ரெப்' பாடகர் வேடன்



ரெப் பாடல்களை எழுதி, தானே பாடி, வெளியிட்டு, உலக அளவில் மிகப்பெரிய ரசிகர் பட்டாளத்தை உருவாக்கிய இலங்கையரின் திருமணம் குறித்த செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

இளம் இசைக் கலைஞர்களில் முக்கியமான ஒருவராகத் திகழும் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட வேடன் எனும் ஹிரன்தாஸ் முரளியின் திருமணம் தொடர்பிலேயே இந்த செய்தி வெளியாகியுள்ளது.

சமூக அக்கறை, அரசியல் நுணுக்கம், தெரு வாழ்க்கையின் உண்மை முகம், இளைஞர்களின் மனநிலையை பிரதிபலிக்கும் வரிகள் என அனைத்தையும் கலந்து தனது பாடல்களை உருவாக்கும் திறமையால், மிகக் குறுகிய காலத்திலேயே தனக்கென ஒரு தனி அடையாளத்தை அவர் கட்டியெழுப்பியுள்ளார்.

கடந்த ஆண்டு மலையாளத்தில் வெளியாகி பெரும் அளவில் கவனம் பெற்ற மஞ்சுமெல் பாய்ஸ் திரைப்படத்தில் இடம் பெற்ற "குத்தந்திரம்" பாடல் வேடனின் இசைப் பயணத்தில் மிகப்பெரிய திருப்பமாக அமைந்தது. இந்த பாடல் அவரை திரை இசை ரசிகர்களிடமும் பரவலாக அறிமுகப்படுத்தியது.

இவ்வாறு இசையில் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் வேடன், தற்போது தனது வாழ்க்கையின் அடுத்த கட்டமாக திருமண வாழ்க்கைக்குள் நுழைந்துள்ளார். அவரின் நீண்ட நாள் காதலியும், எழுத்தாளருமான நவமி லதாவை திருச்சூரில் வைத்து நேற்று முன்தினம் திருமணம் செய்து கொண்டுள்ளார். (3)

## 107 நாடுகளின் ஆத

# ரஷ்யா - உக்ரைன் போ

## ஐ.நா சபையில் தீர்மானம்



(வோஷிங்டன்)........

**ஐந்து ஆண்டுகளாக நீடித்து வரும் ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு 107 நாடுகள் ஆதரவளித்த நிலையில் செவ்வாய்க்கிழமை இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

இந்த தீர்மானத்துக்கு 107 நாடுகள் ஆதரவாகவும், ஈரான் உள்ளிட்ட 12 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன.

அதேவேளை, இத்தீர்மானத்துக்கான வாக்கெடுப்பில் இலங்கை, இந்தியா, அமெரிக்கா, சீனா, பங்களாதேஷ் முதலான 51 நாடுகள் பங்கேற்கவில்லை.

ரஷ்யா - உக்ரைன் ஆகிய நாடுகளுக்கிடையில் தொடர்ச்சியாக நிலவி வரும் போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

இதன் காரணமாக, மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக உலக நாடுகளின் ஆதரவை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி

## அமெரிக்காவில் கடும் பனிப்புயல்

# 153 ஆண்டு வரலாற்றில் முதல்முறையாக நாளிதழ் வெளியீடு இடைநிறுத்தம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் கடந்த சில நாட்களாக பனிப்புயல் வீசி வரும் நிலையில் 153 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக தி பாஸ்டன் குளோப் பத்திரிகை, தனது தினசரி செய்தித்தாளை அச்சிடுவதை நிறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் பனிப்புயல் தாக்கத்தால் பல இடங்களில் பனி 3 அடி உயரம் வரை குவிந்துள்ளது.

நியூஜெர்சி மாகாணத்தில் அவசர நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த கடுமையான பனிப்புயலால் 153

## உக்ரைனுக்கான மின்சார விநியோகத்தை நிறுத்தியது ஸ்லோவாக்கியா அரசு

(கீவ்)

எண்ணெய் விவகாரம் காரணமாக ஸ்லோவாக்கியா உக்ரைனுக்கு மின்சாரம் வழங்குவதை நிறுத்தியுள்ளது.

ஸ்லோவாக்கியா அரசு, உக்ரைனுக்கு வழங்கி வந்த அவசர மின்சார உதவியை தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

ரஷ்யா தொடர்ந்து உக்ரைனின் எரிசக்தி அமைப்புகளை தாக்கி, அங்கு அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுகிறது.

இந்த நிலையில், எண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஸ்லோவாக்கியா இந்த முடிவை எடுத்துள்ளது.

ஜனவரி மாதம் முதல், ரஷ்யா ட்ரோன் தாக்குதலால் ட்ருஸ்பா எண்ணெய் குழாய் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் மத்திய ஐரோப்பாவுக்கு செல்லும் எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது.

ஆனால் ஸ்லோவாக்கியா பிரதமர் ராபர்ட் பிகோ, எண்ணெய் குழாய் இயங்குகிறது என்றும், உக்ரைன் அரசாங்கம் எண்ணெய் விநியோகத்தை அரசியல் காரணங்களுக்காக நிறுத்தியதாக குற்றம் சாட்டியுள்ளார்.

"எண்ணெய் விநியோகம் மீண்டும் தொடங்கும் வரை உக்ரைனின் மின்சார வலையமைப்பை நிலைப்படுத்த உதவ முடியாது" என்று ஃபிகோ தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த உக்ரைன் வெளிவிவகார அமைச்சர், இரு நாடுகளும் பொறுப்புடன் நடந்து, ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஸ்லோவாக்கியாவில் எதிர்க்கட்சிகள், அரசின் இந்த முடிவைக் கடுமையாக விமர்சித்துள்ளன.

இந்த நடவடிக்கை, ரஷ்யா - உக்ரைன் போரின் தாக்கம் எரிசக்தித் துறையில் எவ்வளவு தீவிரமாக உள்ளது என்பதை மீண்டும் வெளிப்படுத்துகிறது. (3)




ஆன
முன
பத்
செய்
நிறு
ப
அ
மாக
அடி
என
பண
ஏற்ப
தழ்
பட்டு

இ
கரு
ப
(லண
இங்
டமிருந்
கருப்ப
மூலம்
எனும்
எனும்
துள்ளது
பிரச
லாத கு
பெண்
யாளரி
மருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ஆதரவுடன்
## ன் போர் நிறுத்த
## னம் நிறைவேற்றம்




திரட்டி வருகிறார். இந்த சூழலில் ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை உடனடியாக நிறுத்துவதற்கு அழைப்பு விடுத்து, ஐ.நா.சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்த தீர்மானத்துக்கு 107 நாடுகள் ஆதரவளித்த நிலையில், அந்த நாடுகளுக்கு உக்ரைன் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் தளப் பக்கத்தில், "முழுமையான போர் நிறுத்தம் மற்றும் எங்கள் நாட்டு மக்கள் மீண்டும் தாய்நாடு திரும்புவதற்கான தெளிவான அழைப்புகளுடன் கூடிய எங்களின் தீர்மானத்தை ஐ.நா பொதுச் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

இது சரியான நடவடிக்கை. அமைதியை ஏற்படுத்த எங்களின் நட்பு நாடுகளுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவேன்" என்று குறிப்பிட்டுள்ளார். (3)

## தாய்லாந்து பூங்காவில் 72 புலிகள் திடீர் மரணம்



(தாய்பே)

தாய்லாந்தின் சியாங் மாய் நகரில் அமைந்துள்ள புகழ்பெற்ற "டைகர் கிங்டம்" பூங்காவில், கடந்த இரண்டு வார காலப்பகுதியில் மாத்திரம் 72 புலிகள் உயிரிழந்துள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் கால்நடை உற்பத்தி திணைக்களம் நடத்திய முதற்கட்ட சோதனையில், "கேனைன் டிஸ்டெம்பர் வைரஸ்" எனும் மிக வேகமாகப் பரவக் கூடிய வைரஸ் தொற்றினாலேயே இப்புலிகள் உயிரிழந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக நாய்கள் மத்தியில் காணப்படும் இந்த வைரஸ், புலிகளின் சுவாசப்பை, வயிறு மற்றும் நரம்பு மண்டலத்தை கடுமையாகத் தாக்கி மரணத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துத் கருத்துத் தெரிவித்த கால்நடைத் திணைக்களப் பணிப்பாளர், "புலிகள் நோய் வாய்ப்பட்டிருப்பதை நாங்கள் கண்டறிந்தபோது நிலைமை கையை மீறிச் சென்றிருந்தது. பூனைகள் அல்லது நாய்களைப் போலன்றி, புலிகளின் நோய் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிவது மிகவும் கடினமானது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அனர்த்தத்தைத் தொடர்ந்து, சுமார் 240 இற்கும் மேற்பட்ட புலிகளைக் கொண்டுள்ள குறித்த பூங்கா இரண்டு வாரங்களுக்குத் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. அத்துடன் பூங்கா முழுவதும் கிருமி நீக்கம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், உயிரிழந்த புலிகளின் உடல்கள் தகனம் செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. (3)

## ...ாக ...தம்

...உயரம் ...அவசர ...பட்டுள் ...ண்டுமை ...153

ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக தி பாஸ்டன் குளோப் பத்திரிகை, தனது தினசரி செய்தித்தாளை அச்சிடுவதை நிறுத்தியுள்ளது.

பாஸ்டன் குளோப் அச்சகம் அமைந்துள்ள மசாசூசெட்ஸ் மாகாணத்தின் பிரிஸ்டாலில் 2 அடி உயரத்துக்கு பனி குவிந்துள்ளமையினால் ஊழியர்கள் பணிக்கு வருவதில் சிரமம் ஏற்பட்டது என்பதாலேயே நாளிதழ் வெளியாவது நிறுத்தப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் பிரபல நாளிதழான தி பாஸ்டன் குளோப், 1872ஆம் ஆண்டு நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாஸ்டன் குளோப் நாளிதழின் 153 ஆண்டு கால வரலாற்றில் முதல் முறையாக நாளிதழ் வெளியீடு நிறுத்துப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)




## இறந்தவரிடமிருந்து தானமாக பெறப்பட்ட கருப்பை மூலம் பிறந்த முதல் குழந்தை

### மருத்துவத் துறையில் புதிய மைல்கல்

(லண்டன்)

இங்கிலாந்தில் இறந்த ஒருவரிடமிருந்து தானமாகப் பெறப்பட்ட கருப்பை மாற்று அறுவை சிகிச்சை மூலம் பிறந்த முதல் குழந்தை எனும் சாதனையை ஹ்யூகோ எனும் ஆண் குழந்தை படைத்துள்ளது.

பிறவியிலேயே கருப்பை இல்லாத குறைபாட்டைக் கொண்ட ஒரு பெண், மறைந்த ஒரு கொடையாளரின் உறுப்பைப் பெற்று மருத்துவச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

கடந்த 2025 கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னதாக, மேற்கு லண்டனில் உள்ள குயீன் சார்லோட் மற்றும் செலிசி மருத்துவமனையில் ஹ்யூகோ பிறந்துள்ளார்.

பிறக்கும்போது சுமார் (3.1 கிலோ கிராம்) எடையுடன் இருந்ததாகவும் தற்போதுவரை ஆரோக்கியமாக இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.





பல தசாப்த கால மருத்துவ ஆராய்ச்சியின் விளைவாக நடைபெற்ற இந்த அறுவை சிகிச்சை, கருவுறாமை சிக்கல்களைக் கொண்ட பல பெண்களுக்குப் புதிய நம்பிக்கையை அளித்துள்ளது.

ஏற்கனவே உயிருள்ள உறவினர்களிடம் இருந்து பெறப்பட்ட கருப்பை மூலம் ஒரு குழந்தை பிறந்த நிலையில், தற்போது உறுப்பு தானம் மூலம் ஹ்யூகோ பிறந்தது ஒரு முக்கிய மைல் கல்லாகக் கருதப்படுகிறது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பூநகரியில்

# பன்றி நெல்லின் தாக்கம் அதிகரிப்பு விவசாயிகள் கவலை

(பூநகரி) -----------------------

**பூநகரி கமநல சேவை நிலைய எல்லைக்குள் நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல்களில் பன்றி நெல்லின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

★ ★ ★



இது சம்பந்தமாக பூநகரி பிரதேச விவசாயப் போதனாசிரியரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது இப்பன்றி நெல் எமது நெல்லினத்தைச் சேர்ந்த பயிர் ஆகையால் இதை அழிக்கக்கூடிய களை கொல்லி கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் இந்நெல் 5 வருடத்துக்கு மேல் முளைதிறன் கொண்டதாக இருக்கும் எனவும் இதைப் பிடுங்கித்தான் அழிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

இப்பன்றி நெல்லின் தாக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்து விவசாயிகளுக்கான அறிவுறுத்தல் கருத்தரங்குகள் அண்மையில் நடத்தப்பட்டதாகவும் விவசாயத் திணைக்களமும் இவ்விடயம் சம்பந்தமாக கரிசனை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (8-84)

# பூநகரி பிரதேச சபை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.இளங்குமரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு சகல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம சேவை அலுவலர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு பூநகரி பிரதேச செயலர் வே.ஆயகுலனால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (8-84)

# வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எருவிட்டான் கிராமத்தில் 1.5 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைப்பு பணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த வீதி புனரமைப்புப் பணிகளுக்காக 57.82 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (8-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 300 | 250 | 170 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 150 | 200 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 300 | 350 | 300 |
| தக்காளி | 100 | 150 | 150 | 200 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 160 | 180 | 90 |
| கோவா | 100 | 120 | 200 | 200 | 150 | 150 |
| கரட் | 250 | 350 | 400 | 300 | 320 | 300 |
| பூசணி | 120 | 120 | 150 | 140 | 120 | 90 |
| புடோல் | 150 | 150 | 200 | 200 | 160 | 130 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 | 200 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 250 | 180 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 | 160 | -- |
| பாகற்காய் | 600 | 450 | 500 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 300 | 250 | 150 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 400 | 400 | 350 | 175 |
| லீக்ஸ் | 350 | 300 | 400 | 300 | 300 | 270 |
| பீற்றூட் | 150 | 150 | 200 | 200 | 200 | 150 |
| கறிமிளகாய் | 550 | 450 | 400 | 400 | 400 | 550 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 4000 | -- | 2500 | -- |
| போஞ்சி | 350 | 250 | 400 | 250 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 300 | 200 | -- | -- |
| கீரை - 1 பிடி | 140 | 60-140 | 200 | 100 | -- | 100 |
| தேசிக்காய் | 100 | 80 | 200 | 200 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 170 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 450 | 500 | 300 | 350 | -- | 325 |
| வெங்காயப்பூ | 120 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 200 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 150 | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | 150 | -- | 100 |

# இராசிபலன்

26.02.2026
மாசி 14, வியாழக்கிழமை
தசமி பின்னிரவு 12.59 மணிவரை

மிருக சீரிடம் பிற்பகல் 12.41 மணிவரை
சுப நேரம் 7.39-9.29 மணிவரை
இராகுகாலம் 1.59-3.29 மணிவரை

சந்திராஷ்டமம்:
விசாகம், அனுசம்

வளவன்

**மேஷம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** — மாற்றங்களால் ஏற்றமுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுப விரயங்கள் ஏற்படலாம், ரோக பயமுண்டு.

**துலாம்** — உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** — வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமானசிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கனிவோடு பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**ரிஷபம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு.

**சிம்மம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்** — அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்** — பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், எதிர்கால நலன்கருதி ஆக்கபூர்வமான திட்டங்கள் தீட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**மிதுனம்** — ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், வியாபார நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** — ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலம் உண்டு.

**தனுசு** — நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** — உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

நேர்மையான எந்த மனிதனும் திடீரென பணக்காரன் ஆனதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 02

## யாழ்.போதனா வைத்தியசாலை 11

புருசோத்தமன்




(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்தியசாலை என்பது தனித்து ஓரிருவரில் தங்கியுள்ள அமைப்பன்று. மாறாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தொடக்கம் மருத்துவ நிபுணர்கள், ஏனைய மருத்துவர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள், இதர பணியாளர்கள், நிர்வாகத் தரப்புகள் என அனைவரதும் ஒத்துழைப்புடன் இயங்குகின்ற அமைப்பு.

எனவே அனைவரதும் பரிபூரணமான ஒத்துழைப்புக் கிடைக்கும் போது தான் யாழ்.போதனா வைத்தியசாலையால் உன்னதமான பணியை வழங்க முடியும்.

இருந்தும் சதா நோயாளர்களின் துயரங்களைக் காண்பதனாலோ என்னவோ பொதுவில் வைத்தியசாலைப் பணியாளர்களில் கணிசமானவர்கள் பக்குவமாகக் கதைக்கின்ற நிலைமையில் இருந்து விலகியுள்ளனர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், யாழ்.போதனா வைத்தியசாலையின் கட்டுமானங்கள் அதிகரித்துள்ள நிலையில், அவரவர் தத்தம் சிகிச்சை நிலையங்களைக் கண்டறிவதென்பது கூட கடினமான காரியமே.

சிகிச்சைப் பிரிவுகள் தொடர்பான அடையாளப்படுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் அது பற்றிக் கவனம் செலுத்தாமல், வைத்தியசாலைப் பணியாளர்களிடம் வினவுகின்ற நிலைமை இருக்கவே செய்கிறது.

இங்குதான் சம்பந்தப்பட்டவர்களை ஆற்றுப்படுத்துகின்ற பெரும் பொறுப்பு வைத்தியசாலையின் அத்தனை பணியாளர்களுக்கும் உரியதாகின்றது.

என்ன செய்வது வாழ்க்கையில் ஒரு முறையேனும் வைத்தியசாலைக்கு வராதவர்கள் இலட்சக்கணக்கில் உளர். இத்தகையவர்கள் முதற் தடவையாக வைத்தியசாலையின் நுழைவாயிலில் கால் வைக்கும் போது, அவர்களிடம் இருக்கக் கூடிய பதற்றமும் இனம் புரியாத திகைப்பும் நியாயமானதே.

இங்கு தான் நிலைமையை புரிந்து கொண்டு அவர்களுக்கு உரிய வழிப்படுத்தல்களைச் செய்து அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டியுள்ளது.

இவ்விடத்தில் பணியாளர்கள் எவரும் வெறுப்போ-கடுப்போ அடைய வேண்டிய தேவையில்லை.

ஆனாலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றக் கூடியவர்களில் கணிசமானவர்கள் வெறுப்போடும் விரக்தியோடும் மனச்சலிப்போடும் கூடிய மனநிலையில் வேலை செய்வதைக் காண முடியும்.

இவ்வாறான நிலைமை அவர்களின் சொந்த இயல்பா? அல்லது வீட்டுச் சூழலா? அன்றி அவர்களின் மேல்மட்ட முகாமைகள் கொடுக்கும் அழுத்தமா? என்பது தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற ஒவ்வொரு பணியாளர்களும் அரச நியமனம் பெற்றவர்கள். அரச வேதனத்தைப் பெற்றுக் கொள்பவர்கள்.

எனவே சொந்த குணவியல்புகளினின்று விலகி, பொது நிலையில் நின்று, வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்கள்-நோயாளர்களை அழைத்து வருபவர்கள்-பார்வையாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுடன் இன்முகத்துடன் பழகுகின்ற-கதைக்கின்ற உயர்ந்த பண்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதை நாம் கூறும் போது சிரித்த முகத்துடன்-இனியன பேசுகின்ற மிக உன்னத மானவர்களும் வைத்தியசாலையின் அத்தனை பதவி நிலைகளிலும் இருக்கின்றனர் என்ற உண்மையையும் நாம் மறந்து விட முடியாது.

### தனியார் வைத்தியசாலைகள்

இப்போது யாழ்ப்பாணத்தில் தனியார் வைத்தியசாலைகள் நோயாளர்களால் நிறைந்து வழிவதைக் காண முடிகிறது.

அதிலும் மாலை வேளைகளில், கும்பமேளாவில் நடைபெறும் மகாமக உற்சவம் போல நோயாளர்கள் குவிகின்றனர்.

இவற்றைப் பார்க்கும் போது அரச வைத்தியசாலைகள் தோல்வி கண்டு விட்டனவா என்று எண்ணத் தோன்றும்.

ஆம் பிரதேச, மாவட்ட, பிராந்திய, போதனா வைத்தியசாலைகள் நம் மண்ணில் இயங்குகின்ற போதிலும் ஏகப்பட்ட பணச்செலவைக் கொண்ட தனியார் வைத்தியசாலைகளை மக்கள் நாடுகின்ற நிலைமைக்குக் காரணம் என்ன என்று ஆராய்வது கட்டாயமானது.

இங்கு தான் ஓர் உண்மையை கூறியாக வேண்டும்.

அதாவது, யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற வைத்திய நிபுணர்களே யாழ்.மாவட்டத்திலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகளிலும் வைத்திய நிபுணர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

ஆக, குறித்த மருத்துவ நிபுணர்களின் சேவையை யாழ்.போதனா வைத்தியசாலையில் பெற்றுக் கொள்வது கடினம் என்ற நிலையில், தனியார் வைத்தியசாலைகளை நாடுகின்ற தேவை ஏற்படுகின்றது.

இதையும் கடந்து இன்னுமோர் உண்மையை நாம் கூறியாக வேண்டும். அதாவது, நாட்டின் தலைநகர் உள்ளிட்ட நகரங்களில் தனியார் வைத்தியசாலைகள் என்பன பிரபல தொழிலதிபர்களின்-முதலீட்டாளர்களின் சொத்தாக இருக்க, யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகள் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற வைத்திய நிபுணர்கள் சிலரின் அல்லது மருத்துவர்கள் சிலரின் சொந்தச் சொத்தாக இருக்கின்றன.

உண்மையில் இது யாழ்ப்பாண மக்களின் துரதிஷ்டம் என்றே கூற வேண்டும்.

எதுவாயினும் மருத்துவ நிபுணர்கள் பலர் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்லாமல், தங்களின் முழு நேரத்தையும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களுடன் செலவிடுகின்ற பெருந்தன்மையையும் இங்கு நாம் குறிப்பிட வேண்டும்.

தவிர, இன்னும் சில மருத்துவ நிபுணர்கள் தனியார் வைத்தியசாலைகளில் தாம் பார்வையிடும் நோயாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தியுள்ளனர்.

இங்கு தனியார் வைத்தியசாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை ஊக்குவிப்பதாக; யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் எதிர்கொள்கின்ற அசௌகரியங்கள் உள்ளன என்பதை இங்கு தெரியப்படுத்துவது கட்டாயமானது.

நாளை தொடரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 987





இந்த வீரருடைய முன்னோர்கள், சேர சோழ பாண்டியர்களுடைய தலைகளைப் பறித்துக் கொண்டு வந்து கழனியில் நடவு நட்டார்களாம்!"

கரிகாலருடைய முகத்தில் அருவருப்பும் குரோதமும் தாண்டவம் ஆடின. "நல்ல உழவு! நல்ல நடவு!" என்று சொல்லிவிட்டு அவர் இடி இடி என்று வாய் விட்டுச் சிரித்தார்.

வந்தியத்தேவன் கரிகாலருடைய முகத்தையே ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. அவன் தட்டு தடுமாறி, "தேவி! இத்தகைய பாடல் ஒன்றை தங்களிடம் நான் சொல்லவே இல்லையே?" என்றான்.

"அதனால் என்ன? ஏற்கெனவே தெரிந்து கொண்டிரா விட்டால் உமது குலத்தின் பெருமையை இப்போதாவது தெரிந்து கொள்ளும்! அவ்வாறு முக்குலத்து வேந்தர்களின் முடிகளைப் பறித்து நட்ட வம்சத்தில் கேவலம் காயம்பட்ட புலி ஒன்றின் தலையைக் கொண்டு வர முடியவில்லையே?" என்றாள்.

"தேவி! காயம்பட்ட அந்தப் புலி செத்துத் தொலைந்து போய் விட்டது. செத்த புலியின் தலையை வெட்ட நான் விரும்பவில்லை."

"அது எப்படி? புலி தத்தித் தத்திப் படகில் ஏறியதை நான் பார்த்தேனே?" என்றார் கரிகாலர்.

"நான்தான் அந்தக் காட்சியைத் தங்களுக்குக் காட்டினேன். படகில் ஏறிப் படுத்துக் கொண்ட பிறகு அது செத்துப் போயிருக்கிறது. பழுவூர் இளைய ராணியின் திருமேனியைக் காயப்படுத்தி விட்டோமே என்ற பச்சாத்தாபத்தினால் அது பிராணனை விட்டு விட்டதோ, என்னமோ?" என்றான் வந்தியத்தேவன்.

கரிகாலன் முகத்தில் கடுகடுப்புச் சிறிது தணிந்து புன்னகை அரும்பியது. "ஆனால் அது தண்ணீரிலேயே செத்துப் போயிருக்கலாமே? படகில் ஏறிச் சாக வேண்டியதில்லையே?" என்றார் கரிகாலர்.

"என்னைப்போல் அதற்கும் தண்ணீரைக் கண்டால் பிடிப்பதில்லை போலிருக்கிறது. எல்லாச் சாவுகளிலும் தண்ணீரிலே சாவது தான் எனக்குப் பயமளிக்கிறது!" என்றான் வந்தியத்தேவன்.

"ஆயினும் சற்று முன்னால் தைரியமாகத் தண்ணீரில் குதித்து விட்டீரே? இந்தப் பேதைப் பெண்களின் பேரில் அவ்வளவு கருணை போலிருக்கிறது?"

"தேவி! தண்ணீரைக் காட்டிலும் எனக்குப் பெண்களைக் கண்டால் அதிக பயம் உண்டாகிறது. இளவரசருடைய வற்புறுத்தலுக்காகத்தான் குதித்தேன். உண்மையில் அப்படிக் குதித்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்று இப்போது தெரிகிறது" என்றான் வல்லவரையன்.

"ஆம், ஆம்! நீர் தண்ணீரில் விழுந்து சாவது பற்றித் தான் உமக்குப் பயம். பிறரை மூழ்க அடித்துச் சாகச் செய்வது பற்றி உமக்குப் பயமே இல்லை!" என்றாள் நந்தினி.

இந்தப் பேச்சுக்கள் ஒன்றும் மணிமேகலைக் குப் பிடிக்கவில்லை என்பது அவளுடைய முகபாவத்திலிருந்து நன்கு வெளியாயிற்று.


"அக்கா, சமைத்த உணவு ஆறிப் போய்விடும் வாருங்கள் போகலாம்!" என்றாள்.

நால்வரும் பளிங்கு மண்டபத்தை நோக்கி நடந்தார்கள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பதறினால் சிதறும்



ஒருவனுக்குப் பத்து ஆண்டு சிறைத் தண்டனை கிடைத்தது. சிறையிலிருந்த அவன் எப்படிப் பொழுதைக் கழிப்பது என்று சிந்தித்தான்.

அவன் அருகே எறும்பு ஒன்று வந்தது. அதைப் பார்த்ததும் "இந்த எறும்பிற்கும் பயிற்சி தந்து இதை நான் சொன்னபடி எல்லாம் செய்ய வைக்கிறேன்.

விடுதலையானதும் இதைக் கொண்டே நான் பெரிய பணக்காரனாவேன்" என்று முடிவு செய்தான்.

அன்றிலிருந்து எறும்பிற்குப் பயிற்சி தரத்தொடங்கினான். இரண்டாண்டுகளில் அந்த எறும்பு இரண்டு கால்களால் அவன் முன் நடந்து காட்டியது.

ஐந்தாண்டுகளில் அவன் சொன்னபடிக் குட்டிக் கரணம் போட்டது. பயிற்சி இல்லாத நேரங்களில் அவன் அதை ஒரு தீப்பெட்டிக்குள் போட்டு வைத்தான்.

அந்த எறும்பு இப்பொழுது அவன் எது சொன்னாலும் செய்யக்கூடிய பயிற்சியைப் பெற்று விட்டது. வெளியுலகில் தனக்கு கிடைக்கப் போகும் மதிப்பையும் பாராட்டையும் எண்ணிப் பூரிப்படைந்தான் அவன்.

விடுதலை நாளும் வந்தது. வெளி உலகத்திற்கு வந்த அவன் சாப்பிடுவதற்காக ஒரு உணவு விடுதியை அடைந்தான். பரிமாறுபவனை அழைத்து "சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டு வா" என்று கட்டளையிட்டான்.

பரிமாறுபவன் வரத் தாமதமாயிற்று. அவனால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. தன் பைக்குள் இருந்த தீப்பெட்டியை எடுத்தான்.

அதிலிருந்த எறும்பை எடுத்து மேசையின் மேல் வைத்தான். அதை இரண்டு கால்களால் நடக்கச் சொன்னான். அப்படியே அது செய்தது.

அப்பொழுது பரிமாறுபவன் சாப்பாட்டுடன் அங்கு வந்தான். அவனிடம் பெருமையாக, "மேசையின் மேல் உள்ள எறும்பைப் பார்த்தாயா?" என்று கேட்டான். உடனே பரிமாறுபவன், "ஐயா! நாங்கள் எவ்வளவோ சுத்தமாகத்தான் இந்த விடுதியை வைத்திருக்கிறோம். எப்படியோ தெரியவில்லை.

ஒன்றிரண்டு எறும்புகள் வந்து விடுகின்றன. மன்னியுங்கள்" என்று கூறி விட்டு அந்த எறும்பைக் கையால் நசுக்கித் தூக்கி எறிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி மூலம் செய்யப்படும் சிறு முயற்சிகள் நம் இதயத்தில் மிக அற்புதமான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அபிவிருத்தியை தடுப்பதில் தீவிரம் காட்டும் தரப்புகள்

நம்மாழ்வார் என்ற இயற்கை விவசாய விஞ்ஞானி நம் தமிழ்நாட்டில் சமகாலத்தில் வாழ்ந்தவர்.

அவரின் கருத்துக்கள் அற்புதமானவை. இயற்கை முறையில் விவசாயத்தை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் பரப்பியவர்.

இதற்கும் மேலாக, எங்கள் மரபு வழி விவசாய விதைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

ஒருமுறை ஒரு கூட்டத்தில் கருத்துரைத்த அவர்; ஒரு திட்டம் வேண்டாம் என்று மறுப்பவர்கள் அதற்கான மாற்று வழித் திட்டத்தை முன்வைக்க வேண்டும்.

அவ்வாறு அவர்கள் மாற்றுத்திட்டத்தை முன்வைக்கவில்லை எனில், அவர்களின் நோக்கம் மக்கள் சார்ந்ததாக இருக்க முடியாது என்றார்.

உண்மை. நம்மாழ்வார் கூறிய அக்கருத்து மிகவும் யதார்த்தமானது என்பதை நாம் அனுபவத்தில் காண்கின்றோம்.

ஆம், மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை தடுப்பதில் நம்மவர்களே முன்னிலை வகிக்கின்றனர்.

பறவைகள், கண்டல் தாவரங்கள் என ஏதோ காரணம் கூறி, சர்வதேச கிரிக்கெட் மைதானத்தைத் தடுப்பது அவர்களின் நோக்கமாகிறது.

மண்டைதீவில் அமையப் பெறுகின்ற சர்வதேச கிரிக்கெட் மைதானம் என்பது எங்கள் யாழ்ப்பாண மண்ணின் பொருளாதாரத்தில் கணிசமான பங்களிப்புச் செய்யக்கூடியது.

தவிர, எங்கள் மாணவர்கள் கிரிக்கெட் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதற்குமான சந்தர்ப்பங்களும் ஏற்படும்.

இதைவிட, நாங்கள் எங்களை சரியாக வழிப்படுத்துவோமாயின், எங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு நல்லதோர் வாய்ப்பும் ஏற்படும்.

இதற்கும் மேலாக, மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமையும் போது அங்கு ஏற்படுகின்ற வேலைவாய்ப்புகளில் கணிசமானவை எங்கள் இளைஞர் யுவதிகளுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்கூட்டியே நம்மவர்கள் முன்வைக்கும் போது, வேலைவாய்ப்பும் எம் பிள்ளைகளுக்குச் சாத்தியமாகும்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தினூடு எங்களின் பொருளாதாரத்தை எங்ஙனம் உயர்த்த முடியும் என ஆராய்வதுதான் புத்திசாலித்தனம்.

இதைவிடுத்து பறவைகள், கண்டல்காடுகள் என்று கூறி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை தடுக்க முற்படுபவர்கள் எங்கள் மண்ணுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் என்ன என்பதையும் முன்வைக்க வேண்டும்.

அதேநேரம் மண்டைதீவில் உள்ள நூற்றுக் கணக்கான ஊர் மாடுகள் களவாகப் பிடிக்கப்பட்டு பற்றைக் காடுகளுக்குள் வைத்து வெட்டி இறைச்சியாக்கிய போது அதற்காகக் குரல் கொடுக்காதவர்கள், இப்போது மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதானத்தைத் தடுத்து நிறுத்த முனைப்புக் காட்டுவதுதான் ஏன் என்று புரியவில்லை.

## கடந்தகால அரசியல்வாதிகள்

# அரசியல் அதிகாரத்தை தக்கவைக்க பாதாளக் குழுவினரின் உதவியை நாடியுள்ளனர்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

கடந்த காலங்களில் அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களின் உதவி பெறப்பட்டமைக்கான தகவல்கள் வெளியாகியுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

மீரிகம பொலிஸ்நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

இந்தக் குற்றச் செயல்கள் ஒரு குறிப்பிட்ட திசையிலேயே வளர்ச்சியடைந்துள்ளன.

அரசியல் ஆதரவுடனேயே பாதாள உலகச் செயற்பாடுகளும் போதைப் பொருள் கடத்தலும் விரிவடைந்தன.

இதற்குத் தனிப்பட்ட உதாரணங்கள் தேவையில்லை. அரசியல்வாதிகளே இதனை வளர்த்தெடுத்தனர்.

ஆட்சியதிகாரத்தைத் தக்கவைக்கப் பாதாள உலகத்தையும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளையும் அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

போதைப்பொருள் மூலம் ஈட்டப்பட்ட பணம் இதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

சில அரசியல் கட்சிகளின் கூட்டங்களை ஒழுங்கமைக்கும் பணிகளுக்குப் பாதாள உலகத்தினர் பயன்படுத்தப்பட்டமை தற்போது அம்பலமாகியுள்ளது.

இந்தப் பின்னணியைப் புரிந்துகொண்டு தற்போது படிப்படியாக அரசியல் தொடர்புகள் நீக்கப்பட்டு வருகின்றன. பொலிஸார் இதனைக் கட்டுப்படுத்தத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களும் பாதாள உலகக் குழுவினரும் ஒரே தரப்பினரே.

போதைப்பொருள் கடத்தலின்போது அவர்களுக்குள் ஏற்படும் பிணக்குகள் மற்றும் மோதல்களே இந்தக் கொலைகளுக்குக் காரணமாகின்றன.

நாங்கள் இந்தக் கொலைகளை அங்கீகரிக்கவில்லை. அவற்றைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கிறோம் என்றார். (ம-7)

# அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு கொலை மிரட்டல் - சி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் அந்த அமைச்சின் பிரதி அமைச்சர் சுனில் வடகல ஆகியோருக்கு விடுக்கப்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல்கள் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் (CID) விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸார் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

நேற்று (25) பொலிஸ் ஊடகப் பிரிவில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யு.வூட்லர் இது குறித்த விபரங்களை வெளியிட்டார்.

அவிசாவளைப் பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த இரகசியப் புலனாய்வுத் தகவலொன்றின் அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அமைச்சர்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தகவல்கள் குறித்துப் பொலிஸார் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்த அச்சுறுத்தலைத் தொடர்ந்து அமைச்சர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிகப் பாதுகாப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அச்சுறுத்தலின் பின்னணியிலுள்ள நபர்கள் அல்லது குழுக்கள் யார் என்பது தொடர்பில் சி.ஐ.டி.யினர் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முக்கிய அமைச்சர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த அச்சுறுத்தல் நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பாதுகாப்புச் சூழலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம-7)

# கிளிநொச்சி மேல் நீதிமன்றில் பகிரங்க ஏல விற்பனை

கிளிநொச்சி மேல் நீதிமன்றினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பறிமுதல் செய்யப்பட்டு, இதுவரை எவராலும் உரிமை கோரப்படாத வாகனங்களை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் மேல் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இதுகுறித்து கிளிநொச்சி மேல் நீதிமன்றம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த வாகனங்களுக்கு எவராவது உரிமை கோர விரும்பினால், ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னதாக தமது கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அதேவேளை ஏலத்தில் கலந்து கொள்வோர் ஏலத்திற்கு விடப்படவுள்ள வாகனங்களை அன்றைய தினம் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

ஏலத்தில் வாகனத்தை வெற்றிகொள்பவர்கள் அதற்கான முழுத் தொகையையும் உடனடியாகச் செலுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

காசோலைகள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

பணம் செலுத்தியவுடன் வாகனங்களை உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய செல்லுபடியாகும் ஆவணங்களை (தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது ஓட்டுநர் உரிமம்) கட்டாயம் கொண்டு வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழில் இ.போ.ச வுக்கு சொந்தமான

# முப்பது பேருந்துகள் இயங்கு நிலையில் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான மூன்று சாலைகளிலும் 147 பேருந்துகள் காணப்படுகின்ற போதிலும் 30 பேருந்துகள் இயங்கு நிலையில் இல்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் இணைந்து நடாத்தும் உள்ளூர் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

**32**

என்.சொக்கன்

வெறும் பிட் நோட்டீஸ்தான் என்று முடிவு கட்டிவிட்டது அமெரிக்கா.

ஆனாலும், சிஐஏ ஒஸாமா மீதான தனது பார்வையை நகர்த்தவில்லை. அவர் பாகிஸ்தானுக்குச் சென்றதை யும், அங்கே பெனசிர் புட்டோ தலைமையிலான அரசு அவருக்குக் கொடுத்த நெருக்கடிகளையும், பிறகு அவர் சூடானுக்குக் குடிபெயர்ந்த தையும் தொடர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

உலகம் முழுவதும் அல் காய்தா வின் கிளைகள், சகோதர இயக்கங் கள் தோன்ற ஆரம்பித்த காலகட்டம் இது. இவை அனைத்தையும் ஒருங் கிணைத்து, ஒரு பலம் வாய்ந்த நெட்வொர்க் உருவாக்கிக் கொண்டி ருந்தார் பின் லேடன்.

1992 டிசம்பரில், ஏடன் துறை முகத்தில் வந்திறங்கிய அமெரிக்கப் படை வீரர்கள் மீது, அல் காய்தா வெடிகுண்டுத் தாக்குதல் நிகழ்த்தி யது. அதிஷ்டவசமாக, இதில் அமெ ரிக்கர்கள் யாரும் கொல்லப்பட வில்லை.

அடுத்த வருடம், கிட்டத்தட்ட இதேமாதிரியான இன்னொரு தாக்கு தலுக்குத் திட்டமிட்டது அல் காய்தா. இந்தமுறை, அமெரிக்க மண்ணி லேயே.

நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையக்(WTC - World Trade Center) கட்டடங்கள் தான் ஒஸாமாவின் இலக்கு. 1993 பெப்ரவரி 26 ஆம் திகதி WTC கட்டடங்களின் தரையடித் தளத்தில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது.

ஆனால், இந்தமுறையும், அல் காய்தா எதிர்பார்த்த சேதம் இல்லை. மிகச் சிலர்தான் மரணமடைந்திருந் தார்கள். தவிர, இந்தச் சதியில் ஈடுபட்டவர்களை மிக விரைவில் தேடிப் பிடித்துவிட்டது அமெரிக்கா.

பின்னாட்களில் அல் காய்தா நிகழ்த்திய தாக்குதல்களோடு ஒப்பிடும் போது, இந்த இரண்டு சம்பவங்களும் மிகச் சாதார ணமானவை. "படுதோல்வி" என்று கூடச் சொல்லி விடலாம்.

ஆனால், இந்தச் சம்பவங்களுக்குப் பிறகுதான், ஒஸாமா பின் லேடனை அலட்சியப்படுத்துவதற்கில்லை என்று புரிந்துகொண்டது அமெரிக்கா. சிஐஏ மேலும் தீவிரமாக அல் காய்தாவைக் கண்காணிக்க ஆரம்பித்தது.

இதற்குள், அல் காய்தாவின் நெட் வொர்க் பலம்பெறத் தொடங்கியிருந் தது. ஒஸாமாவுக்கென்று ஒரு நம்பிக் கைக்குரிய உள்வட்டம் உருவாகியி ருந்தது. அங்கேதான் அடுத்த கட்டத் திட்டங்கள் அனைத்தும் தயாராகிக் கொண்டிருந்தன.

சிஐஏவுக்கு அந்த விவரங்கள் முக்கியம். அல் காய்தா அடுத்து எங்கே, யாரை, எப்படித் தாக்கப் போகிறார்கள் என்று தெரியாதவரை, அவர்களை உளவறிந்து எந்தப் புண்ணியமும் கிடையாது.




இதனால் வழக்கம்போல் அல் காய்தாவினுள் தன்னுடைய உள வாளிகளை ஊடுருவச் செய்ய முயன் றது சிஐஏ. ஏற்கெனவே அந்த இயக்கத் தில் பயிற்சி பெற்றுவரும் சிலரைப் பணம் கொடுத்துத் தங்களுடைய ஒற்றர்களாக மாற்றவும் முயற்சி செய்தார்கள்.

இதில் சிஐஏவுக்கு ஓரளவு வெற்றி கிடைத்தது. ஆனாலும், ஒஸாமாவின் உள்வட்டத்தில் இருக்கிற யாரையும் அவர்களால் வளைக்கமுடியவில்லை.

விளைவு, அல் காய்தா பற்றிய மேலோட்டமான தகவல்கள் சிஐஏ வுக்கு எப்போதும்போல் கிடைத்துக் கொண்டிருந்தன. மற்றபடி, நிஜமான தாக்குதல் திட்டங்களைப்பற்றி அவர்க ளால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

அதுதான் பின் லேடனின் சாமர்த் தியம். தாக்குதல்களை வடிவமைத்துத் திட்டமிடுவதில் தொடங்கி, அவற்றை யார், எப்படி நிறைவேற்றவேண்டும் என்கிற நுணுக்கமான தகவல்கள் வரை அனைத்தையும், தேவையான நபர்களிடம் மட்டுமே விவாதிப்பது என்ற பழக்கத்தைக் கடைபிடித்துக் கொண்டிருந்தார் அவர்.

ஒஸாமாவின் உள்வட்டத்தில் கூட, ஒருவருக்குத் தெரியும் விடயம் இன்னொருவருக்குத் தெரிந்திருக்காது. எல்லாம் தெரிந்த நபர், அநேகமாக பின் லேடன் ஒருவராகதான் இருப்பார். அவரை நிச்சயம் சிஐஏவால் விலை கொடுத்து வாங்கமுடியாது.

இப்படித் தங்களது இரகசியத் திட்டங்களுக்கு "எக்ஸ்ட்ரா" பாதுகாப்பு கொடுத்தபிறகு, அல் காய்தாவின் அடுத்த நிலைக் கட்டமைப்பை உறு திப்படுத்தும் வேலைகளில் இறங் கினார் பின்லேடன். அவருடைய ஆக்ரோஷமான பேச்சுகளைக் கேட்டு, ஏராளமான இளைஞர்கள் அல் காய் தாவில் இணையத் தொடங்கினா ர்கள். அதன்பிறகுதான், அமெரிக் காவுக்கு எதிராகப் பகிரங்கமாகப் பேசத் தொடங் கினார் ஒஸாமா பின் லேடன். 1998ஆம் ஆண்டு, அல் காய்தா அமெரிக்காவுக்கு எதிரான தனது அடுத்த ஃபத்வாவை வெளியிட்டது.

இந்தமுறை, அவர்களின் ஃபத்வா வைத் துப்பறிந்து சிஐஏ தேவைப்பட வில்லை. சொல்வதற்கு "அமெரிக்கர் களே, ஜாக்கிரதை" என்று வெளிப் படையாகவே அறிக்கை வெளியிட்டு விட்டது அல் காய்தா.

அமெரிக்கா, கடவுளுக்கு எதிரான தேசம். ஆகவே, அமெரிக்கர்களை எங்கே பார்த்தாலும் கொல்லுங்கள். அதுதான் ஒவ்வொரு முஸ்லீமின் கடமை.

இதைவிட நேரடியான ஒரு மிரட் டல் இருக்கவேமுடியாது. சென்ற முறை அமெரிக்கப் படை வீரர்களைத் தாக்குவோம் என்று அதட்டிய ஒஸாமா, இப்போது அமெரிக்கர்கள் அனைவ ருக்கும் குறி வைத்துவிட்டார்.இரா ணுவ வீரர்கள், பொதுஜனங் கள் என்று எல்லோரும் இதில் அடக்கம்.

இதென்ன கலாட்டா? அமெரிக்க மக்கள் ஒஸாமாவை என்ன செய்தார் கள்? ஏன் அவர்களைக் கொல்ல வேண்டும்? "அமெரிக்கர்களாகப் பிறந்த எல்லோரும், எங்களுடைய எதிரிகள் தான்" என்றார் ஒஸாமா. அதோடு நிறுத்தாமல், "அமெரிக் காவுக்கு எதிரான எங்கள் யுத்தம், பல வடிவங்களில் தொடர்ந்து நடக்கும்" என்றும் எச்சரித்தார்.

இது வெறும் மிரட்டலாக நின்று விடவில்லை. நிஜமாகவே அல் காய்தாவில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இணைந்து கொண்டி ருக்கிறார்கள்.

வேறு இயக்கங்களும் அவர்க ளோடு பல கை கோர்த்துக் கொண்டி ருக்கிறார்கள், இவர்களில் பலர் வேறு அடையாளங்களோடு அமெரிக்கா வினுள் குடியேறியிருப்பதாகத் தக வல்கள் சொல்கின்றன. இரகசியமாக ஆயுதம் தயாரிக்கிறார்கள், வெடி குண்டு தயாரிக்கிறார்கள், அணு குண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக் கூட சிஐஏவுக்குத் தகவல் கிடைத்திருந்தது.

அமெரிக்கா மீதான பெரிய தாக்கு தல்கள், படுகொலைகள் ஆகியவை தான் ஒஸாமாவின் ஒரே நோக்கமாக இருந்தது. இதைத்தவிர வேறு எந்த வழியிலும் அவர்களை வழிக்குக் கொண்டுவர முடியாது என்று தீர்மா னித்து விட்டார்.

அல் காய்தாவின் அதிவேக வளர்ச்சி பற்றியும், அவர்களுக்கு எங்கிருந்து, யாரிடமிருந்து, எப்படி உதவி கிடைக் கிறது என்பதையும், அவர்கள் எங்கே முகாமிட்டிருக்கிறார்கள். என்ன விதமான பயிற்சி பெறுகிறார்கள் என்றும் சிஐஏ ஓரளவு சரியாகவே தெரிந்துகொண்டிருந்தது.

ஆனால், அப்போது ஆப்கானில் மறைந்து வாழ்ந்துகொண்டிருந்த பின் லேடனின் அடுத்த இலக்கு என்ன என்பதை மட்டும் அவர்களால் சரியாகக் கண்டறியவே முடிய வில்லை.

போதாக்குறைக்கு, சிஐஏவைக் குழப்புகிற புண்ணிய காரியத்தை யும், அல் காய்தா நன்றாகவே செய்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடி மருந்துடன்...

ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கள்ளப்பாடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கள்ளப்பாடு தெற்குப்பகுதியைச் சேர்ந்தவராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து சுமார் 2 கிலோ 700 கிராம் அளவுடைய C4 வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதுடன் சந்தேகநபர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,299)

## குஸ் போதை...

குறித்த கைது நடவடிக்கையானது நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இரு மாணவர்களும் தென்னிலங்கையிலிருந்து வந்து கல்வி கற்பதாகவும் ஒரு மாணவனின் உடைமையில் 1 கிராம் குஸ் போதைப்பொருளும் மற்றைய மாணவரின் உடைமையில் 710 மில்லி கிராம் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஸ்ரீகிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளனர். (ம-7)

## புலிகளின்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைத் தேடி பரந்தனில் அகழ்வுப் பணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் புகையிரத நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள், வெடிபொருட்கள் இருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த அகழ்வின்போது எந்தவித தடயப் பொருட்களும் கிடைக்கப் பெறவில்லை. இதனைத் தொடர்ந்து அகழ்வுப் பணி இடை நடுவே கைவிடப்பட்டது. (ம-7,316)

## விசுவமடுவில்...

டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபரீதம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக புதுகுடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## சுன்னாகம்...

நடந்து சென்ற பெண்ணொருவரின் தங்கச் சங்கிலி இராணுவ முகாமில் பணியாற்றும் ஒருவரால் கொள்ளையடிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த பெண் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபரான மயிலிட்டி இராணுவ முகாமில் பணி புரியும் நபர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியான சி.நிதர்சன் மேற்பார்வையில் குறித்த கைது முன்னெடுக்கப்பட்டது. (ம-7,104)

## அடாவடியாக...

யில் விவசாயிகள் வரிசையில் காத்திருந்தபோது, இராணுவத்தினர் அங்கு புகுந்து 70க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகளை முன்னுரிமை அடிப்படையில் விற்பனை செய்துள்ளதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மாவட்ட அதிகாரி மறுத்தபோதும் வட மாகாண பொறுப்பதிகாரியின் உத்தரவின் பேரில் இந்த நெற் கொள்வனவு இடம்பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லையே இராணுவத்தினர் இவ்வாறு விற்பனை செய்துள்ளனர்.

இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியை விடுத்து விவசாயம் மற்றும் வியாபாரங்களில் ஈடுபடுவது உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதாக ரவிகரன் எம்.பி குற்றஞ் சாட்டினார்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் அச்சுறுத்தலை நீக்கி விவசாயிகளின் உரிமையைப் பாதுகாக்க இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.(ம-7)

## பொதுமக்கள்...

அக்காணிகளை விடுவிக்க வன வளத் திணைக்களம் மறுப்புத் தெரிவிப்பதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாவட்டச் செயலகத்தால் பரிந்துரைக்கப்படும் காணிகளை வன வளத் திணைக்களம் முழுமையாக விடுவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (25) கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வன வளத் திணைக்களத்திடமிருந்து 10,821 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் வெறுமனே 1,088 ஏக்கர் காணியை மாத்திரமே விடுவிக்க வனவளத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளதாக மாவட்டச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

கோரப்பட்ட முழுமையான 10,821 ஏக்கர் காணியையும் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்திய நிலையில், அக்கோரிக்கைக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஏகமனதாக அனுமதி வழங்கியது.

வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான முழுமையான விபரங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் இதன்போது குறிப்பிட்டார். (ம-7)

# சடலம் மீட்பு

குப்பிளான் தெற்குப் பகுதியில் தனிமையில் வசித்து வந்த வயோதிப மாது ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் அருந்தவம் (வயது-75) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)


மஹஜன சம்பத
திகதி 2026.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 6116
Z 6 2 6 3 0 9
அத சம்பத Z 6 3 0 9
சீட்டிழுப்பு இலக்கம் 0691
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 0232
கும்பம் 04 13 36
6496

தன நிதானய
திகதி - 2026.02.25
சீட்டிழுப்பு இலக்கம் - 2146
K 23 41 46 80 K

மெகா பவர்
திகதி 25/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2464
S 05 15 23 55 57

ஜய ஜய JAYA
திகதி 2026.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 0384
M 3 0 7 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4358
சீட்டிழுப்பு திகதி 25.02.2026
W 24 33 65 78
W

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 1425
மிதுனம் 16 43 45 60 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
25.02.2026
வெற்றி வாரம் 0824
P 9 0 0 2 7 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,237,647.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3090
சீட்டிழுப்பு திகதி 2026.02.25 தினம் புதன்கிழமை
04 11 14 15 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 101,718,408.00

சனிதா
திகதி 25.02.2026 வெற்றி வாரம் 5251
32 34 40 50 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,448,268.80

சசிரி
வெற்றி வாரம் 920
சீட்டிழுப்பு திகதி 25.02.2026
புதன்கிழமை
01 11 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.3,926,880.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4802
சீட்டிழுப்பு திகதி 25.02.2026 தினம் புதன்கிழமை
45 47 50 54 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 34 06 43 56 68
2266
25.02.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.161,999,250.00

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2916
சீட்டிழுப்பு திகதி : 2026.02.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.94,002,471.20
11 57 59 75 K


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி ஆதரவாளர்களை திருப்திப்படுத்த சுரேஷ் சலே கைது

## உதய கம்மன்பில தெரிவிப்பு

முன்னாள் புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமையானது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பிரிவினைவாத சக்திகளை திருப்திப்படுத்தும் நோக்கத்திலேயே இடம்பெற்றது என உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று (25) காலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகள் அமைப்பை தோற்கடிக்க சுரேஷ் சலே முக்கிய பங்காற்றியவர். 2023 ஆம் ஆண்டு Channel 4 வெளியிட்ட நிகழ்ச்சி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (ம-7)

## சுரேஷ்...

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயின் பெயரை தொடர்புபடுத்தி, பிரித்தானியாவின் 'Channel 4' தொலைக்காட்சி 2023 ஆம் ஆண்டு ஒரு விசேட ஆவணப்படத்தை வெளியிட்டிருந்தது.

அந்த ஆவணப்படத்தில் ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இராஜாங்க அமைச்சராக இருந்த பிள்ளையானின் செயலாளராக பணியாற்றிய அசாத் மௌலானா என்பவர் சுரேஷ் சாலே தொடர்பான குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்த காலப் பகுதியில் சுரேஷ் சாலே இராணுவப் புலனாய்வுப் பணிப்பகத்தின் தலைவராகக் கடமையாற்றியிருந்தார்.

எனினும் 2024 நவம்பரில் ஜனாதிபதியாக பதவியேற்ற அநுர குமார திஸாநாயக்கவால் அவர் தனது பதவியிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 72 மணி...

பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜீவ மெதவத்த மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜாலிய சேனாரத்ன ஆகியோர் இது குறித்த மேலதிக விபரங்களை வெளியிட்டனர்.

2019 உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அண்மையில் கிடைத்துள்ள புதிய மற்றும் வலுவான சாட்சியங்களின் அடிப்படையிலேயே சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மிக நீண்ட மற்றும் ஆழமான விசாரணை நடத்தப்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாகக் கைதுக்கான முழுமையான காரணங்களை இப்போதே பகிரங்கப்படுத்த முடியாது என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜீவ மெதவத்த குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தற்காலிக விதிகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளதால் அவரை 72 மணிநேரம் (3 நாட்கள்) தடுத்து வைத்து விசாரணை செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு கிடைத்துள்ளது. விசாரணைகளின் முன்னேற்றம் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் தேவைப்படின் மேலதிக தடுப்புக் காவல் உத்தரவைப் பெற்றுக்கொள்ளவும் சட்டத்தில் இடமுண்டு என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜாலிய சேனாரத்ன விளக்கமளித்தார்.

சுரேஷ் சலேயிடம் முன்னெடுக்கப்படும் தீவிர விசாரணைகளின் ஊடாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் இருந்த உண்மையான சூத்திரதாரிகள் மற்றும் அதன் மறைமுகத் தொடர்புகள் குறித்த இரகசியங்களை வெளிப்படுத்த முடியும் எனப் பொலிஸ் தரப்பு பலமான நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சுரேஷ் சலே கைது செய்யப்பட்ட விதம் குறித்து சமூக வலைத்தளங்களில் எழுந்துள்ள விமர்சனங்களுக்குப் பதிலளித்த சஜீவ மெதவத்த,

அவரை நாம் கைது செய்யாமல் இருந்திருந்தால்தான் பொலிஸாருக்கு எதிராக விமர்சனங்களும் பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். பொலிஸார் தமது கடமையைச் சட்டத்திற்கு உட்பட்டுச் சரியாகச் செய்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசேட குழுவொன்று சுரேஷ் சலேயிடம் வாக்குமூலங்களைப் பெற்று வருவதுடன் தாக்குதல் தொடர்பான கோப்புகளுடன் அவரது தொடர்புகளை ஒப்பிட்டு மீளாய்வு செய்து வருகின்றது. இந்த விசாரணை முடிவுகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. (ம-7)

## யாழில்...

மீட்டர் வட்டிக்குப் பணத்தை வழங்கும் ஒருவர் மற்றைய ஒருவருக்கு மீட்டர் வட்டிக்குப் பணத்தை கொடுத்துள்ளார். இந்நிலையில் வாங்கிய பணத்திற்கு மேலாக வட்டி செலுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் தொடர்ச்சியாக வட்டி செலுத்தாத காரணத்தால் வட்டிக்கு பணத்தைக் கொடுத்தவர் நேற்று முன்தினம் இரவு கத்தி முனையில் வட்டிக்குப் பணத்தை பெற்றவரது 17 இலட்சம் ரூபா பெறுமதியான முச்சக்கர வண்டியை மிரட்டி பறித்துச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.நிதர்சன் தலைமையிலான குழுவினர் நேற்று அதிகாலை குறித்த சந்தேகநபரை கைது செய்ததுடன் முச்சக்கர வண்டியையும் மீட்டுள்ளனர்.

இந்நிலையில் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)


### வேலைவாய்ப்பு

நிறுவனத்தின் வகை: ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் பனைசார் உணவு பதனிடல்
பதவி: முகாமையாளர் இடம்: பூநகரி, கிளிநொச்சி
கொடுப்பனவு: 100,000/= வரையில் (அனைத்து கொடுப்பனவுகளும் அடங்கலாக)
எதிர்பார்க்கப்படும் தகமைகள் மற்றும் தகுதிகள்.
பண்ணையில் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவராக இருத்தல். சகலவித பதிவேடுகளையும் கையாளுதல், மனித வள முகாமைத்துவம் துறைசார் முன் அனுபவத்துடன் கூடிய டிப்ளோமா பட்டதாரியாக, அல்லது பல்கலைக்கழக பட்டதாரியாக இருத்தல் அல்லது துறை சார் நிர்வாக முன் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். (2089)
070 576 3974

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5062)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மணப்பெண் தேவை

01.நயினாதீவு - வேலணை, இந்து, 1995, பூரட்டாதி, PHD, USA மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(47115)
02.சுழிபுரம், இந்து, 1993, பரணி, BSc (Hons) in Quantity Surveying, Senior Quantity Surveyor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(38211)
03.அளவெட்டி, இந்து, 1996, சுதயம், BSc in business and Finance மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57368)
04.காரைநகர், இந்து, 1991, அனுஷம், Bsc Engineering Peradeniya University, Engineer மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(55580)
05.வட்டுக்கோட்டை, இந்து, 1986, ரோகிணி, MBBS, Doctor, Germany Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(56380)
06.சாவகச்சேரி, இந்து, 1995, புனர்பூசம், Computer Science & Engineering, Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54523)
07.நல்லூர், இந்து, 1983, கேட்டை, Accounting Degree, Accountant, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (44878)
08.சங்கானை, இந்து, 1991, சதயம், BBA & Masters, manager, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(53902)
09.உரும்பிராய் - அச்சுவேலி, இந்து, 1991, பூரம், PHD, UK Educated, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(57168)
10.இணுவில், இந்து, 1994, திருவோணம், Bachelor of Civil Engineering, Civil Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54449)
நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. (2090)
S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 992 1494

### உடனடி வேலைவாய்ப்பு

Restaurant ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
❖ WAITER
❖ KITCHEN HELPER
❖ MEAT/ VEG CUTTER
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும்.
வெளிமாவட்டத்தவர்களும் விண்ணப்பிக்கலாம். (6917)
தொடர்பு : 076 175 4225

### நேரடி - ZOOM வகுப்புக்கள்

உளச்சார்பு – ஆ.நித்தியானந்தன் (BSc, Dip in Ed)
பொது அறிவு – இ.ஸ்ரீரங்கநாதன் (BA (Hons), MA)
பதிவாளர், கிராமசேவகர், ஆசிரியர் மற்றும் அரச நியமன போட்டிப் பரீட்சைகளுக்கானது. (6921)
076 799 9005, 077 665 4010
Physics Center
15B, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

TECNO WORLD
தொழில் நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை
A/L 2028
A/L தொழில்நுட்பப் பிரிவு
ஆரம்பம் : 02.03.2026 (திங்கட்கிழமை)
நேரம் : காலை 9 மணி
A/L 2026, 2027 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு: (C-5059)
077 017 5346

இலங்கையில் இருந்து கனடாவிற்கு
கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப

10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY ▶ 2-3 Months
எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, கோப்பாய், சுன்னாகம், கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், நெல்லியடி (C-5061)
V2 TRAVELS 076 822 6244, 076 455 0672

### வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (2084)
076 889 1308
077 606 1333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.